**மில்லனிய பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

-------------------------------------------

## 1. கொடுக்கல் வாங்கல் அறிக்கை

2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கொடுக்கல் வாங்கல்கள், செயற்பாடுகள் மற்றும் செயலாற்றல் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2021 பெப்ரவரி 08 ஆம் திகதியும், விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 பெப்ரவரி 18 ஆம் திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

## 2. இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134(1) ஆம் பிரிவு | - | அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசமாக பிரதேச சபையினால் வெளியிடப்பட்ட பிரதேசங்களில் உள்ளடங்கியுள்ள அசைவுறாத ஆதனங்கள் தொடர்பாக ஆதன வரிக்காக புதிய இனங்காணல்கள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆதன வரி வலயத்தை இனங்காண்பதற்கு வருமான பரிசோதகர் இருவரை உள்ளடக்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டு ஆதன வரி பிரதேசங்கள் சில இனங்காணப்பட்டுள்ளது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 1646 | | சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 09 வாகனங்களுக்குரிய 2019 ஆம் ஆண்டின் ஓட்டக்குறிப்புக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2021.03.31 ஆம் திகதிக்கு முன்னர் ஓட்டக் குறிப்புக்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. வருமான நிர்வாகம்

### 3.1 முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகார தரப்பினரிடம் இருந்தும் 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 1,178,000 ஆகும். | விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விண்ணப்பிக்கின்ற சகல முத்திரைக் கட்டணங்களும் சபைக்கு கிடைக்கப் பெறாதிருந்ததுடன், வழங்கப்படுகின்ற முத்திரக் கட்டணங்கள் சபை நிதியத்தில் செலவு வைக்கப்படும். |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) செயல்நடவடிக்கைத் திட்டம் | | |
| (i) செயல்நடவடிக்கைத் திட்டத்தைத் தயாரித்தல் | | |
| 2014 பெப்ரவரி 14 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் 3(ஆ) பிரிவின் பிரகாரம் சபையினால் 2019 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் நிர்மாண கிரயம் மற்றும் நிர்மாண கால அட்டவணை என்பன முறையாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் முறையாக தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரியாக நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு புறம்பான செயற்திட்டங்களை நிறைவேற்றுதல்<br>--------------------------------------------------- | | |
| • | வெளிவாரி நிதி ஏற்பாட்டின் கீழ் 2019 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவத்றகாக 17 செயற்திட்டங்கள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் இனங்காணப்பட்டிருந்த போதிலும், அந்த செயற்திட்டத்தில் எதுவும் அமுல்படுத்தப்படாதிருந்ததுடன், வெளிவாரி நிதி ஏற்பாட்டின் கீழ் ரூபா 12,360,000 தொகையான 20 செயற்திட்டங்கள் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு புறம்பாக நிறைவேற்றப்பட்டிருந்தன. | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் செயற்திட்டங்களை இனங்கண்டு அமுல்படுத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் செயற்திட்டங்களை திருத்துவதாயின் திட்டத்தின் பிரகாரம் செயற்படுத்தப்படும். |
| • | சபை நிதியத்தின் கீழ் அமுல்படுத்துவத்றகாக மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் செயற்திட்டங்கள் இனங்காணப்பட்டு பாதீட்டு நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்ட போதிலும், அவ்வாறான செயற்திட்டங்களை இனங்கண்டு நிதி ஏற்பாடு ஒதுக்கப்படாமல் ரூபா 1,311,807 கிரயமான 07 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் இனங்காணப்பட்ட கிரயங்கள் பாதீட்டில் உள்ளடக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (iii) | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் முன்னேற்றம்.<br>--------------------------------------------------- | | |
| | மீளாய்வாண்டில் 05 நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் 96 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக செயல்நடவடிக்கைத் திட்டத்தில் இனங்காணப்பட்ட பொறுப்புக்கள் மற்றும் மேற்பார்வைகள் கையளிக்கப்பட்ட போதிலும், அதன் செயல்முன்னேற்றத்தை அளவிடுவதற்கான திட்ட முறையொன்று சபையிடம் காணப்படவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் செயல்முன்னேற்றத் தை அளவிடும் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் செயல் முன்னேற்றத்தை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிட்டுக் கொள்கின்றோம். |
| (ஆ) | கழிவுப் பொருள் முகாமைத்துவம்<br>------------------------------------------------- | | |
| (i) | கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக சுகாதார சேவைகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அமுல்படுத்துவதற்கு 07 | கழிவுப் பொருள் முகாமைத்துவ திட்டத்தில் இனங்காணப்பட்ட | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு குறிப்பிட்டுக் கொள்கின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்பாடுகள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட போதிலும், அந்த செயற்பாடுகளுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் இனங்காணப்படாமல் வருடாந்த பாதீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்பாடுகள் வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகளில் உள்ளடக்கப்பட வேண்டும். | |
| (ii) | இதன் போது கழிவுப் பொருள் முகாமைத்துவத்தை முறைமைப்படுத்துவதற்காக 04 நோக்கங்களின் கீழ் இனங்காணப்பட்ட 07 செயற்பாடுகளின் பொறுப்புக்கள் மற்றும் மேற்பார்வைகளுக்கான உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்ட போதிலும், அந்த செயற்பாடுகளில் செயல் முன்னேற்றம் அளவிடப்பட்டு பின் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கழிவுப் பொருள் முகாமைத்துவ திட்டத்தின் செயல் முன்னேற்றத்தை அளவிட்டு பின் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (இ) | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு<br>---------------------------------------------------- | | |
| (i) | நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 08 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு இனங்காணப்பட்ட போதிலும், சாத்தியவள அறிக்கை தயாரித்து அங்கீகாரத்தைப் பெற்று வருடாந்த பாதீட்டில் உள்ளடக்கி அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி செயற்திட்டங்கள் இனங்காணப்பட்டு அங்கீகாரத்தினைப் பெற்று பாதீடு செய்து அமுல்படுத்துதல் வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | தாய் சேய் சிகிச்சை நிலையங்கள் மற்றும் குடிநீர் வசதிகளை வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் இரண்டிற்காக ரூபா 100,000 நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்ட போதிலும், அவை மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், இனங்காணப்பட்ட மிகுதி 06 செயற்திட்டங்களுக்காக ரூபா 460,000 நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டு 09 செயற்பாடுகளின் கீழ் அமுல்படுத்துதவதற்கு திட்டமிடப்பட்ட போதிலும், அந்த செயற்பாடுகளின் செயல் முன்னேற்றம் இலக்கிடப்பட்ட குறிகாட்டியின் பிரகாரம் அடைந்து கொள்வதற்கு தவறியிருந்தது. | இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் , செயற்திட்டத்தின் செயல் முன்னேற்றத்தை அளவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**4.2 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் செயலாளர் பதவி 2019 யூன் 25 ஆம் திகதி முதல் வெற்றிடமாக காணப்பட்டதுடன், கடமைகளை மேவுகை செய்வதற்காக பெண் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். | செயலாளர் பதவியின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நியமன அதிகாரி மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவாக இருந்ததுடன், நியமித்தல் உள்ளூராட்சி செயலாளரினால் மேற்கொள்ளப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ஆ) | பொது சுகாதார பரிசோதகர் பதவி, வேலை கண்காணிப்பாளர் பதவி, சாரதி பதவி, அலுவலக உதவியாளர் பதவி, வேலைகள தொழிலாளர்கள் மூன்று பதவிகள் மற்றும் சுகாதார பதவி ஒன்று என்பன வெற்றிடமாக காணப்பட்டதுடன், முகாமைத்துவ உதவியாளர் பதவியொன்று மிகையாக காணப்பட்டது. | அத்தியவசிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

**4.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சொத்துக்கள், பொறுப்புக்கள் தீர்த்து வைக்கப்படாமை | | |
| | 2018 மார்ச் 20 ஆம் திகதியின் பின்னர் புதிய பிரதேச சபையான ஸ்தாபிக்கப்பட்ட மில்லெனிய பிரதேச சபைக்கு பண்டாரகம பிரதேச சபையில் இருந்து கிடைக்க வேண்டிய சொத்துக்கள, பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவினங்கள் சரியான பிரகாரம் ஒதுக்கி வழங்குதல் 2020 திசெம்பர் 20 ஆம் திகதி வரையும் மேற்கொள்ளப்படாமையினால் மில்லெனிய பிரதேச சபையின் நிலையான சொத்துப் பதிவேடுகளை பேணிச் செல்லல், சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்களை | சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் வருமானம், செலவினங்களை சரியான பிரகாரம் பகிர்ந்து சரிசெய்து பதிவேடுகளுக்கு கொண்டுவரப்பட வேண்டும். | சொத்துக்களை பகிர்ந்தளித்தல் தொடர்பாக உள்ளூராட்சி உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | புத்தகங்களுக்கு கொண்டுவரல் மற்றும் அவற்றின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் மற்றும் ஏனைய சொத்துக்கள் பொறுப்புகள் தொடர்பாக சரியான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. | | |
| (ஆ) | வாகன பயன்பாடு<br>---------------------------- | | |
| | சபை பயன்படுத்துகின்ற 09 வாகனங்களில் 03 வாகனங்கள் பண்டாரகம பிரதேச சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், அந்த வாகனங்கள் பிரதம செயலாளர் அலுவல பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்தது. | சபையினால் வாகனங்களை பதிவு செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வாகனங்களை கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |
| (இ) | சுற்றாடல் அனுமதிப் பத்திரம் விநியோகித்தல்<br>--------------------------------------------------- | | |
| (i) | சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தை விநியோகிக்கும் செயற்பாடுகள் சபையினால் முறையாக மேற்கொள்ளப்படாதிருந்துடன், சரியான மெய்மெய்யாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு சுற்றாடல் அனுமதிப் பத்திரம் வழங்க வேண்டிய கைத்தொழில்களை இனங்காண்பதற்கோ அல்லது மதிப்பிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சரியான மெய்மெய்யாய்வு மேற்கொண்டு சுற்றாடல் அனுமதிப் பத்திரம் வழங்க வேண்டிய கைத்தொழில்கை ள இனங்காண்பதற் கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ii) | 2019 ஆம் ஆண்டின் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் பெறவேண்டிய 97 வேலைகளுக்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்படாதிருந்ததுடன், அந்த வேலைகளுக்காக வியாபார அனுமதிப் பத்திரம் பெறப்பட்டு வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு முன்னர் வியாபார அனுமதிப் பத்திரம் பெறவேண்டியிருந்தமை அறிவிக்கப்பட்டிருந்ததுட ன், சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு 39 நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (iii) | 2019 ஆம் ஆண்டின் போது ஒரு சுற்றாடல் குழுக்கூட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டமையினால் சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தை வழங்கும் | சுற்றாடல் குழுவொன்றை நடாத்தி சுற்றடால் | 2021 ஆம் ஆண்டின் போது பிரச்சினைகளை இனங்கண்டு இந்த நடவடிக்கைள் |

| | | | |
|---|---|---|---|
| | செயற்பாடுகள் மந்த நிலைமையில் காணப்பட்டது. | அனுமதிப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் முறைமைப்டுத்தப் பட வேண்டும். | முறைமைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (ஈ) | சமூக சபைகளை ஸ்தாபித்தல் | | |
| (i) | சமூக சபைகளை ஸ்தாபித்தல், பேணிச் செல்லல் மற்றும் அவற்றின் பணிப் பொறுப்பு நடவடிக்கைகளுக்கு சகல வகையிலும் உதவி வழங்குதல் ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் முன்னுரிமை பொறுப்பாக இருந்ததுடன், மில்லெனிய பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் காணப்படுகின்ற 44 கிராம சேவகர் பிரிவுகளில் 21 கிராம சேவகர் பிரிவுகளில் மாத்திரம் சமூக சபைகள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. | சமூக சபைகளை ஸ்தாபித்து தேவையான நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். | கொவிட் தொற்று நோயின் காரணமாக சமூக சபைகளை ஸ்தாபித்தல் தாமதமாகியிருந்ததுடன் தற்போது சமூக சபைகளை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) | ஸ்தாபிக்கப்பட்டுள்ள சமூக சபைகளின் நிர்வாகம் தொடர்பாக பூரணமாக பொறுப்பு உள்ளூராட்சி நிறுவனத்திற்கு சொந்தமான இருந்ததுடன், அதற்காக உள்ளூராட்சி நிறுவனத்தின் தலைவரினால் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், இரண்டு உறுப்பினர்கள் மற்றும் பதிவு செய்துள்ள சமூக சபை செயற்பாட்டு அங்கத்தவர்கள் நாள்வர்கள் இருக்க வேண்டிய உப குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | சமூக சபைகளின் செயற்படு நிலை தொடர்பாக உப குழுவொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும். | சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்காதிருந்ததுடன், சமூக சபைகளின் உப விதியிலும் குறிப்பிடப்படாதிருந்தமையை அறியத்தருகின்றோம். |
| (iii) | பதிவு செய்துள்ள சகல சமூக சபைகளினாலும் மும்மாத அறிக்கையொன்று உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும், ஒரு சமூக சபையில் இருந்து மும்மாத அறிக்கை சமாப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சமூக சபைகளில் மும்மாத அறிக்கை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கொரோனா தொற்று நோயின் அடிப்படையில் மும்மாத அறிக்கை சமர்ப்பிப்பதற்கு தவறியிருந்த போதிலும், தாபிக்கப்பட்டுள்ள சமூக சபைகளில் செயற்படு நிலையில் காணப்படுகின்றது என்பதை அறியத்தருகின்றோம். |

## 4.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | **சபைக்கு சொந்தமான வீதிகள் இனங்காணப்படாமை** | | |
| | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் 21 ஆம் பிரிவின் பிரகாரம் சபைக்கு சொந்தமான ஒட்டுமொத்த வீதிகளின் அளவும் கிராம சேவகர் பிரிவின் பிரகாரம் (தார், கொங்கிரீட், கிரவல்) இனங்காணப்பட வேண்டியிருந்த போதிலும், சபை அதிகார பிரதேசத்தில் காணப்படுகின்ற 44 கிராம சேவகர் பிரிவுகளில் 14 கிராம சேவகர் பிரிவுகளின் வீதிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபை அதிகார பிரதேசத்தில் காணப்படுகின்ற வீதிகள் கிராம சேவகர் பிரிவின் பிரகாரம் இனங்காணப்பட வேண்டும். | கொரோனா நிலைமையின் அடிப்படையில் தாமதமாகியிருந்த போதிலும், 2021.02.28 ஆம் திகதியில் அளவிடல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ஆ) | **வீதிகளை அளவிட்டு வர்த்தமானியில் பிரசுரித்தல்.** | | |
| | வீதிகளை வர்த்தமானியில் பிரசுரிக்கும் நடவடிக்கைகளில் பிரகாரம் தனியார் வீதியும், பொது வீதியும் என கண்டறிந்து பொது வீதியாக உறுதிப்படுத்தப்பட்டு நில அளவையாளர் திட்டத்தின் பிரகாரம் வீதிகள் அளவிடப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டிய போதிலும், சபைக்குச் சொந்தமான வீதிகளில் முறையாக அளவிடுவதற்கோ வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கோ மீளாய்வாண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொது வீதியாக உறுதிப்படுத்துவதற்கு வீதிகளை அளவிட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டும். | நிதி ஏற்பாடு போதியளவில் இல்லாமையின் காரணமாக எதிர் வரும் 05 வருட காலத்தில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (இ) | **வீதிகளை பதிவேடுகளுக்கு கொண்டுவரல்** | | |
| | பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் 21(1)(2) ஆம் பிரிவுகளின் பிரகாரம் சபை அதிகார பிரதேசத்திற்குரிய வீதிகளை இனங்கண்டு வீதி பதிவேடொன்று தயாரித்து அதனை நாளது வரையாக்க வேண்டியிருந்த போதிலும், சபையின் வீதி பதிவேடு | வீதிகளை இனங்கண்டு பதிவேடுகளுக்கு கொண்டுவந்து நாளது வரையாக்குதல் வேண்டும். | வீதிகளை அளவிட்டு பதிவேடுகளை தயாரித்து எதிர் காலத்தில் பூர்த்தி செய்யப்படும். |

| | | |
|---|---|---|
| தயாரிக்கப்பட்டு மீளாய்வாண்டில் நிர்மாணிக்கப்பட்ட ரூபா 5,200,000 கிரயமான 08 வீதிகள் வீதிப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டு நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. | | |

**4.5 பெறுகைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) வருடாந்த பெறுகை திட்டம் | | |
| தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் பிரிவின் பிராகரம் மீளாய்வாண்டிற்காக பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன், ரூபா 2,168,595 கிரயமான பொருட்பதிவேட்டுப் பொருட்கள் மற்றும் நிர்மாண மூலப் பொருட்கள் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | பெறுகைத் திட்டமொன்றை தயாரித்து அதன் பிரகாரம் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆம் ஆண்டு முதல் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |
| (ஆ) தகனம் செய்வதற்காக 02 மின் பிறப்பாக்கி இயந்திரங்கள் கொள்வனவு செய்தல் | | |
| (i) தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 6.3.3 ஆம் பிரிவின் பிரகாரம் கேள்வி திறத்தல் குழுவினால் கேள்வி தாரர்களின் முன்னால் கேள்வி திறக்கப்பட்டு அதற்கான அறிக்கையொன்று தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு வழங்க வேண்டிய போதிலும், கேள்வி திறத்தல் குழுவினால் வழங்கப்பட்ட தொழில்நுட்ப மாதிரிகள் தெரிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடம் இருந்து 17 ஆம் இலக்க விடயம் தொடர்பாக (கட்டுப்பாட்டு முறைமை) சரியான தகவல்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவிற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | கேள்வி மதிப்பிடுவதற்காக அறிக்கை சரியாக தயாரிக்கப்பட்டு தொழில் நுட்ப மதிப்பீட்டுக்காக அனுப்பப்பட வேண்டும். | அலுவலகங்களில் தாமதமான வழுக்களின் காரணமாக தகவல்களை வழங்குவதற்கு தவறவிடப்பட்டிருந்தமையை அறியத்தருகின்றோம். |
| (ii) மின் பிறப்பாக்கி இயந்திரம் 2020 மே 08 ஆம் திகதி செயற்பாடாதிருந்தமை சுடலை கூட பொறுப்பு | தாமதமின்றி பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட | பழுதுபார்ப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட நிறுவனத்திற்கு |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். | அறிவிக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |
| (இ) | வீதி விளக்கு உபகரணங்களை கொள்வனவு செய்தல் | | |
| (i) | 2019 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 724,000 பெறுமதியான 280 வீதி விளக்கு தொகுதிகள் மற்றும் 29 விஷேட விளக்கு தொகுதிகள் என்பவற்றிக்காக தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.6 ஆம் பிரிவின் பிரகாரம் மாதிரி தயாரிக்கப்பட்டு கூறுவிலை கோரப்பட்டிருக்கவில்லை. | வீதி விளக்கு தொகுதிகளை கொள்வனவு செய்வதற்கான மாதிரிகள் தயாரிக்கப்பட்டு கூறு விலைகள் கோரப்பட வேண்டும். | புதிதாக ஸ்தாபிக்கப்பட்டுள்ள சபை ஆனமையால் நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் புதிய உத்தியோகத்தர்கள் ஆனமையால் இந்த நிலைமை ஏற்பட்டிருந்ததுன், 2020 ஆம் ஆண்டு முதல் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ii) | 25 விஷேட வீதி விளக்கு தொகுதிகளை கொள்வனவு செய்வதற்காக 2019 மே மாதம் கூறு விலை கோரப்பட்டு 02 சந்தர்ப்பங்களின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதன் போது ஒரு வழங்குனரிடம் இருந்தான கூறுவிலையை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு கொள்வனவு செய்யப்பட்டமையினால் அந்த வகையான விளக்கு தொகுதிகளில் ஏனைய சபைகளினால் பெறப்பட்ட கூறுவிலையினை விட அதிகரித்த விலையில் செலுத்துவதற்கு ஏற்பட்டமையினால் ஒன்றுக்கு ரூபா 3,600 வீதம் 25 தொகுதிகளுக்காக ரூபா 90,000 நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | போட்டியாளர் கூறுவிலைகளை கோரி கூடிய தரத்தை உடைய குறைந்த விலையில் கொள்வனவு செய்யப்பட வேண்டும். | பெறுகைகள் சட்ட விதிகளின் பிரகாரம் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |